(இ) மேற்குறிப்பிட்டுள்ள நிலங்களை ஆர்ஜிதப்படுத்தியதற்காக ரூ. 20,74,839.43 ஈட்டுத் தொகையாக அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, ஆயிரம் ஏக்கருக்கு மேல் அக்வையர் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய தொழிற்சாலை அங்கே ஏற்படும்போது, காம்பன்சேஷன்தான் கொடுக்கப்படுகிறது. ஆல்டர்னேடிவ் சைட்டும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1,295 குடும்பங்களில் 534 குடும்பங்களுக்குப் புது வாழ்வு அளிக்கவேண்டியுள்ளது. எஞ்சிய 761 குடும்பங்கள் சொந்தமான பிற நிலங்கள் கொண்டுள்ளதால் அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்க வேண்டியதில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது. அலுவலர் 1, மேற்பார்வையாளர்கள் 2, பணியாளர்கள் 6, தொழிற்சாலைத் தொழிலாளர் அல்லாதார் 5, தொழிற்சாலைத் தொழிலாளர்கள் 77, கல் தோண்டும் தொழிலாளர்கள் 194. 254 குடும்பங்களில் 153 குடும்பங்களில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்புத் தகுதி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற குடும்பங்களுக்கு வேலை வாய்ப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலைக்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் எவ்வளவு ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டன ? ஒரு ஏக்கருக்கு எவ்வளவு ரூபாய் நஷ்டயீடு வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1,909·07 ஏக்கர் நிலம் ரூ. 20,74,839·43 செலவில் கையகப்படுத்தப்பட்டது. அதில் ஒரு ஏக்கருக்கு நீதிமன்றம் தீர்ப்பளித்த 4,33,667·48 ரூபாயும் அடங்கும்.

*Rubber Production.*

* 390 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state the quantum of Rubber Production in the State during the calendar years 1972 and 1973 ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இம் மாநிலத்தில் 1971–72-ஆம் ஆண்டில் 5,140 மெட்ரிக் டன்னும், 1972–73 ஆம் ஆண்டில் 5,513 மெட்ரிக் டன்னும் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, மாவட்டவாரியான புள்ளி விவரம் அறிய விரும்புகிறேன். அத்துடன், 1974-ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி எவ்வளவாக இருந்தது ? கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்பொழுது ஏகதேசம் பத்தாயிரம் ஏக்கரில்தான் ரப்பர் பயிரிடப்படுகிறது. ஏகதேசம் ஒரு இலட்சம் ஏக்கரில் பயிரிட வாய்ப்பு இருக்கிறது.